**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**M.C.O.P.No.293/2022**

**வழக்கு சாட்சி R.W.2**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மஞ்சுளா | தொழில் | : சட்ட உதவி அலுவலர் |
| தகப்பனார் பெயர் | : ராமலிங்கம் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : திருச்சிராப்பள்ளி | வயது | : சுமார் 30 |
| தாலுக்கா | : திருச்சிராப்பள்ளி | நாள் | : 01.07.2026 |
| மாவட்டம் | : திருச்சிராப்பள்ளி | | |

<u>முதல் விசாரணை :</u>

திருச்சி மாவட்டம், திருச்சி ரிலையன்ஸ் Indusind ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், மண்டல அலுவலகத்தில் சட்ட உதவி அலுவலராக பணிபுரிந்து வரும் இந்து சுமார் 30 வயதுள்ள ராமலிங்கம் மகள் மஞ்சுளா ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் 2-ம் எதிர்மனுதாரர் ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| 01 | 10.08.2021 | விபத்தில் சம்மந்தப்பட்டதாக கூறப்படும் TN 56 J 4649 என்ற எண்ணுள்ள Dosth வாகனம் எங்களது காப்பீட்டு நிறுவனத்தில் நிபந்தனைகளுக்குட்பட்ட காப்பீடு – நகல் | எ.ம.சா.ஆ.1 |

| | | | |
|---|---|---|---|
| 02 | 14.05.2026 | வாகன ஓட்டுநர் செல்வசதீஷ் என்பவருக்கு அனுப்பிய வழக்குரைஞர் அறிவிப்பு – அலுவலக நகல் | எ.ம.சா.ஆ.2 |
| 03 | --- | மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை | எ.ம.சா.ஆ.3 |
| 04 | 14.05.2026 | வாகன உரிமையாளருக்கு அனுப்பிய வழக்குரைஞர் அறிவிப்பு – அலுவலக நகல் | எ.ம.சா.ஆ.4 |
| 05 | --- | மேற்படி அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை | எ.ம.சா.ஆ.5 |

மேலே சொன்ன ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்து கொண்டு நீதிமன்றம் சரியென கருதும் உத்தரவை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

**<u>மனுதாரர்கள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>**

இம்மனுவின் மனுதாரர்கள் எங்களது காப்பீட்டு நிறுவனத்தை பொறுத்து மூன்றாம் தரப்பினர்கள் என்றால் ? சரிதான். பாலிசி விதிமீறல் இருக்கும்பட்சத்தில் மனுதாரர்களுக்கு இழப்பீட்டு தொகையினை இன்சூரன்ஸ் நிறுவனம் செலுத்திவிட்டு அந்த தொகையை வாகன உரிமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் ? சரியல்ல. நான் எவ்வளவு நாட்களாக இன்சூரன்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன் என்றால் ? 2024ம் ஆண்டு ஜுலை மாதத்தில் இருந்து பணிபுரிந்து வருகிறேன். எனக்கு இன்சூரன்ஸ் நிறுவனத்தின் சட்ட விதிகளை பற்றி சரிவர தெரியாது என்றால் ? சரியல்ல. நான் சொல்வது தவறு என்றால் ? சரியல்ல. இன்சூரன்ஸ் நிறுவனம் மனுதாரர்களுக்கு இழப்பீட்டு தொகை செலுத்தி வைக்க கடமைப்பட்டவை என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.07.01 17:46:35 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்